# வசந்த இதழ்
# Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA JUNE 2020 - SEPTEMBER 2020 Rs.2/- VOL 15 ISSUE 2

வரலாறு, மனிதனால் உண்டாக்கப்பட்ட பல நெருக்கடி, பேரழிவுகளின் கதைகளை உட்கொண்டதாய் இருக்கிறது. அதுவும், இந்நிகழ்வுகள் அடிக்கடி, திரும்ப திரும்ப, தவறாமல் நிகழ்ந்து வருவதோடு மட்டுமல்லாமல், நிபுணர்கள் மற்றும் அறிஞர்களின் கணிப்புகளை பொய்யாக்கி, எதிர்பாரா அதிர்ச்சியையும் திகைப்பையும் ஏற்படுத்தி வருகிறது; இவை மனித அறிவுக் கணக்குகளையும், பகுத்தறிவு வாதங்களையும் ஒன்றுமில்லாததாக ஆக்கி, மனிதனை திணரடித்து நிற்கதியாக்குகின்றன. ஒரு நெருக்கடிக்கும், அடுத்த நெருக்கடிக்கும் இடைபட்ட காலமே நாம் வாழ்க்கை என்று சொல்லப்படுவது இருந்து வருகிறது. அப்படிப்பட்ட இடைபட்ட காலத்திலும், நம்முடைய நேரத்தையும் ஆற்றலையும் பல விஷயங்களுக்காக செலவிடுகிறோம். ஆனால், உள்ளார்ந்து அக்கறைகொண்டு நமது வாழ்க்கையின் இருப்பைப் பற்றி விசாரணை செய்வதில்லை. அப்படி செய்தால், அது நம் சொந்தவாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பிரதிபலிக்க செய்யமுடியும். தற்போது நாம் வாழும் முறையே அடுத்து வரும் உலக நெருக்கடிக்கான காரணமாகிறதா என்று நாம் நினைப்பதே இல்லை. இக்கேள்வி நம் மனதில் உதிப்பதே இல்லை. அப்படியே நமக்கு உதித்தாலும் அதை எதிர்கொள்ளும் தைரியம் நமக்கு இருப்பதில்லை.

ஜே கிருஷ்ணமூர்த்தி நமக்கு உணர்த்துவது சுருக்கமாக இதைத்தான். அவர் 1933-லிருந்து 1985 வரை பல உரைகள் மற்றும் எழுத்துக்களின் மூலம் இது போன்ற பல அடிப்படை கேள்விகளின் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார். அதில் சிலவற்றை நம் விசாரணைக்காக இவ்விதழில் தரப்படுகிறது.

## ஒட்டுமொத்த மனித மனமே இக்கட்டான நிலையில் உள்ளது

*(பிரபஞ்ச இருத்தல் எனும் புனிதத்திலிருந்து மனிதன் தன்னை துண்டித்துக்கொள்ளும்போது...)*

தற்போதைய உலக நெருக்கடி ஒரு அசாதாரண இயல்புடையது; கடந்த காலத்தில் இது போன்ற பல பேரிடர்களை உலகம் சந்தித்திருந்த போதிலும், தற்போதைய நெருக்கடி மனித வரலாற்றிலுள்ள வழக்கமான பேரிடர் போல அல்ல. இந்த பெருங்குழப்பமான சூழ்நிலை உலக அளவிலானது; இது ஒரு குறிப்பிட்ட தேசத்தினுடையது மட்டும் அல்ல, மாறாக உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பாதிக்கின்ற ஒன்று. உடலியல் மற்றும் மனோரீதியாக, நீதி நெறி மற்றும் ஆன்மீக ரீதியாக, பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஒருமைப்பாடற்ற குழப்பமான சூழ்நிலை உருவாகியுள்ளது. நாமோ, செங்குத்துப் பாறையின் ஆபத்தான விளிம்பில் நின்றுகொண்டு சிறிய விஷயங்களுக்காக சச்சரவு செய்து கொண்டிருக்கிறோம். பேரளவில் இடையூறு விளைவிக்கும் இந்த உலக நெருக்கடியின் ஆழத்தை, அதன் அசாதாரண நிலைமையை சிலர் மட்டுமே உணர்வதாக தெரிகிறது. செங்குத்து பாறையின் ஆபத்தான விளிம்பின் நின்றுகொண்டிருக்கும் சிலர், இந்த குழப்பத்தை பார்த்துவிட்டு, வாழ்க்கை முறையை மறுகட்டமைப்பு, மறு சீரமைப்பு செய்ய விழைகிறார்கள். அவர்களே குழப்பத்தில் உள்ள நிலையில், அவர்கள் மேலும் குழப்பத்தை உண்டாக்கவே செய்வார்கள்.

Madras, 22 October 1947; The Collected Works, Vol. IV.

இந்த பேரிடர், இக்கட்டான நிலை, தற்செயலாக நிகழ்ந்ததல்ல. இது நம் ஒவ்வொருவரால் உருவாக்கப்பட்டது. - நம் தினசரி நடவடிக்கையான பொறாமை, காம உணர்வு, பேராசை, பதவி, அடக்கியாளும் வெறி, போட்டி மனப்பான்மை, இரக்கமற்ற செயல், புலனின்பம் மற்றும் மேம்போக்கான நற்குணம் ஆகியவைகளால் உண்டாக்கப்பட்டது. இந்த தாங்கொணா துயரத்திற்கும் குழப்பத்திற்கும் நாமே பொறுப்பாளி, பிறர் அல்ல. நீங்களும் நானும்தான் காரணம். ஏனென்றால், உங்களுக்கு ஆழ்ந்த சிந்தையில்லை, விழிப்புணர்வில்லை. உங்கள் புலனின்ப நுகர்வை அடையும் விஷயத்திலேயே, சொந்த லட்சியத்திலேயே மூழ்கிபோய் விட்டீர்கள். உடனடி இன்பமே பெரிதாகிவிட்டது. அதை நியாயப்படுத்துமாறு தத்துவங்களை உருவாக்கிக்கொண்டு அதிலேயே மூழ்கிபோவீர்கள். இந்த தாங்கொணா இக்கட்டான நிலைமையை தனிமனிதனான நீங்களே உருவாக்கினீர். இந்த குழப்பத்திற்கு நீங்களே பொறுப்பு. வேறு எந்த கூட்டத்தினரோ, தனிப்பட்ட நபரோ இல்லை. நீங்களே இதற்கு பொறுப்பு.

Madras, 22 October 1947; The Collected Works, Vol. IV.

நவீன உலகம் என்பது என்ன? நவீன உலகம், நூதன தொழில் நுட்ப யுத்திகளை கொண்டு, பெரும் நிறுவனங்களால் உண்டாக்கப்பட்டி ருக்கிறது. தொழில் நுட்ப ரீதியாக இது ஒரு அசாதாரண முன்னேற்றம்தான். ஆனால், உயிர்கள் தேவைகளுக்கான பங்கீடோ சரிசமமாக இருப்பதில்லை; சில பேர்களின் கைகளில் மட்டுமே உற்பத்தி செய்யமுடிவதற்கான வழி உள்ளது. எதிரெதிராக நிற்கின்ற தேசங்கள், அரசாங்களை ஆள்வதற் கான தொடர்ந்து நடக்கும் போர்கள். இதுவே நவீன உலகு, இல்லையா? தொழில்நுட்ப ரீதியில் அபார முன்னேற்றம் உள்ளது, ஆனால், முக்கியமாக இருக்கவேண்டியதான மனோ ரீதியான முன்னேற்றம், அதற்கு நிகராகக்கூட இல்லை. ஆகவே, சமசீரின்மையும் இருந்து கொண்டே இருக்கிறது. அதாதாரன அறிவியல் முன்னேற்றம், அதே சமயம், மனித துயரம், வெறுமை இதயம், வெறுமையான மனம். இதுதான் நவீன உலகம், நீங்களே அந்த நவீன உலகம்; உலகம் உன்னிலிருந்து வேறுபட்டது அல்ல. வெறுமை இதயமும் புத்திமான்களால் உருவாக்கப்பட்ட உலகமே, உனது உலகம், நீங்களே அது.

New Delhi, 14 November 1948;
The Collected Works, Vol. V.

தற்போது நெருக்கடி, இக்கட்டான நிலைமை உள்ளது. இது வெளி உலகத்தில் இருக்கிறது என்று நினைக்காதீர்கள், நிகழ்ந்துகொண்டி ருக்கும் அணு ஆயுத யுத்தம் மற்றும் பிரிவினை எனும் பயங்கரத்தால் என்று நினைக்காதீர்கள். நெருக்கடி நம் உள்மனதில் உள்ளது, நாம் எதுவாக இருக்கிறோமோ, எப்படி ஆகியிருக்கிறோமோ, அதுவே நெருக்கடியாகும்.

Madras, 25 December 1982;
Mind Without Measure.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்துவரும் மனிதனானவன், ஏன் இப்போதிருக்கும் அளவிற்கு, பெரும் பூசல்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகிக்கொண்டிருக்கிறான்?... மக்கள் தொகை பெருக்கம், நீதியின்மை போன்ற வெறும் எளிதான விளக்கங்களையெல்லாம் விடுங்கள்... அப்படியென்றால், இந்த துன்பத்திற்கான முழுமுதல், அடிப்படை காரணம் என்ன? கொல்லாமை, பணிவு, அஹிம்சா போன்ற நல்லொழுக்கத்தை பாரம் பரியமாக பெற்றுள்ள இதுபோன்ற ஒரு நாட்டிற்கே ஏன் இப்படி நிகழ்ந்தது? எப்பொழுதிருலிருந்து முறை தவறிவிட்டது?

Bombay, 28 January 1968;
Meeting Life.

ஏனெனில், பண்டைய காலத்தில், அதிகாரம், பேராசை, போட்டி மனப்பான்மை, பகைமை, பெரிய மனிதனாக வேண்டும் எனும் இலட்சியம் முதலிய பந்தங்களி லிருந்து எல்லாம் வெளியேவந்த ஒரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் ஒழுக்கத்திற்கும், ஆன்மீகத் திற்கும் சீர்குலைவு ஏற்படும் சூழ் நிலையிலிருந்து விலகி நின்று சமுதாயதிற்கு உதவிசெய்தனர். இந்த காரணத்தினால்தான் இந்தியாவைப் போன்ற ஓரிரு நாடுகளில் இது போன்ற கூட்டத்தினர் இருந்தனர். வெகுசில மனிதர்களே உலகில் நடக்கும் குழப்பங்களிலெல்லாம் சிக்கிக்கொள்ளாமல் இருக்கின்றனர். ஆனால் நீங்களோ, பெரும் இக்கட்டில் மாட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

Madras, 26 October 1947;
The Collected Works, Vol. IV.

உங்களைச் சுற்றிலும் பார்த்தீர்கள் என்றால் - மனிதர்களை சொல்ல வில்லை,இயற்கையை சொல்கிறேன்- விண்ணிலும், மண்ணிலும் என்ன ஓர் அசாதாரண ஒழுங்கு, சமச்சீரான இயக்கத்துடனும், இசைவுடனும் செயல்படுவதை பாருங்கள். ஒவ்வொரு மரமும், செடி கொடி மலர்களும் அதற்கே உண்டான ஒழுங்கு, அதற்கே உண்டான அழகு; ஒவ்வொரு மலையுச்சிக் கும் மலையடிவாரத்திற்கு அதற்கே உண்டான லயம், ஸ்திரத்தன்மை. மனிதன் நதியை கட்டுப்படுத்த நினைத்து அதை மாசுபடுத்திய போதிலும், நதிக்கு அதற்கே உண்டான ஓட்டம் உள்ளது, நெடுந் தூர ஓட்டதை இனிதே செய்கிறது.

மனிதனை தவிர்த்து, அனைத்துமே, கடலில், காற்றில், பரந்த அண்டத்தில், ஒரு அசாதாரண தூய்மையுணர்வு, பிரபஞ்ச இருப்புத்தன்மையிலேயே ஓர் ஒழுங்கு இருக்கிறது. நரி கோழியை கொல்வதாக இருக்கலாம். பெரிய விலங்கு சிறிய விலங்குகளை உணவுக்காக எடுத்துகொள்வதாக இருக்கலாம். இவையெல்லாமே பிரபஞ்ச ஒழுங்கின் வடிவமைப்பு, மனிதனைத் தவிர. மனிதன் இவற்றில் தலையிடாதபோது, அதற்கே உண்டான ஒரு மகத்தான அழகும், சமச்சீரும், லயமும் இருந்துகொண்டே இருக்கிறது.

The Whole Movement of Life is
Learning: Letters to the Schools, Ch.70.

...ஆக, இந்த பிரபஞ்ச-இருத்தல் (existence) அனைத்தின் பொருள் என்ன? அது என்ன என்று உங்களுக்கு பார்க்க விருப்பம் இல்லாமல் இருக்கலாம், அதை நீங்கள் தவிர்க்கலாம். ‘‘இளைஞனான எனக்கு இன்னும் வயதாகவில்லை, அது என்னுடைய வேலை இல்லை’’ என்று நீங்கள் சொல்லலாம். வயதானவர்களோ, மன்னித்து விடுங்கள், எங்களுக்கு மிகவும் வயதாகிவிட்டது, அக்கேள்வியை எங்களால் எதிர்கொள்ள முடியாது என்று சொல்வீர்கள்...

நீங்கள் கல்வி எனும் பெயரில் இருபது அல்லது முப்பது வருடங்கள் செலவழிப்பீர்கள் - இயற்பியல், மொழியியல், உயிரியல், சமூகவியல், தத்துவ கல்வி, மனநோய் ஆராய்சிக் கான கல்வி (Psycho analysis) மனநோய் மருத்துவம் (psychiatry) எனும் அறிவுகளுக்காக வருடங்களை செலவழிப்பீர்கள். ஆனால், நீங்கள் யார் என்பதை அறிய, நீங்கள் ஏன் இவ்வாறு வாழ்கிறீர்கள் என்பதை கண்டறிய ஒரு நாளை கூட, ஏன், ஒரு மணி நேரத்தைகூட செலவழிக்க மாட்டீர்கள்.

IIT & Bombay, 7 February 1984;
Why are You being Educated?



Vasantha Ithaz Newsletter June 2020.indd 2
17-06-2020 4:02:46 PM

# திறமையானது ஆன்மீக வாழ்க்கைக்கு ஆபத்தானது

நமது வாழ்க்கையை நாம் வீணடிக்கிறோமா? வீணடித்தல் என்று நான் சொல்வது, பல விதங்களில் நமது ஆற்றலை விரயமாக்குதலை குறிப்பிடுகிறேன் - ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்று அதிலேயே உங்கள் எல்லா ஆற்றலையும் விரயமாக்குதல். நமது இருப்பையே, நமது வாழ்க்கையையே நாம் வீணடிக்கிறோமா? நீங்கள் பணக்காரராக இருந்தால், ''நான் நிறைய பணத்தை சம்பாதித்து சேமித்து வைத்திருக்கிறேன், அது எனக்கு அளவிலா இன்பத்தை தருகிறது'' என்று நீங்கள் சொல்லலாம். அல்லது, உங்களுக்கு குறிப்பிட்டதொரு திறமை இருந்தால், அதன்மூலம் கிடைக்கும் இன்பத்தினால் அதிலேயே எல்லா நேரத்தையும் செலவிடலாம். குறிப்பிட்ட திறமையானது ஆன்மீக வாழ்க்கைக்கு ஆபத்தானது.

திறமை என்பது ஒருவருக்கு பிறவிலேயே கிடைத்த தனித்திறமை, பிறவிலேயே கிடைத்த மனோ சக்தி, உடல் சக்தி, ஒரு குறிப்பிட்ட துறையில் இயற்கையாகவே கிடைத்த அசாதாரண நுட்ப-அறிவு ஆகிய எதுவாகவும் இருக்கலாம். அதாவது நிபுணத்துவம். நிபுணத்துவம் என்பது முழுமை அல்ல. அது சிறு பகுதியில் முழுமையாக இருப்பது. ஆனால், உங்கள் பிரபஞ்ச இருப்பு முழுமை யானது.

ஆக, ''எனது வாழ்க்கையை, எனது இருப்பை நான் வீணடித்துக் கொண்டிருக்கிறேனா? எனும் கேள்வியை உங்களிடம் நீங்கள் கேட்டேயாக வேண்டும்.

நீங்கள் பணக்காரராக இருக்கலாம், எல்லா விதமான சித்தியை (siddhi – மனோ சக்தி) பெற்றிருக்கலாம். நிபுணராக இருக்கலாம், மாபெரும் ஒரு விஞ்ஞானியாக, ஒரு பெரும் வியாபாரியாக இருக்கலாம். ஆனால், உங்கள் வாழ்க்கையின் இறுதியில், இவையெல்லாம் உங்கள் இருப்பை வீணடித்துவிடுமோ? நீங்கள் அதிகாரத்தில், பதவியில் இருக்கலாம். இறுதியில் இவை என்ன? தயவு செய்து கேளுங்கள். இது நீங்கள் உங்களிடம் கேட்கவேண்டிய ஒரு முக்கியமான கேள்வி. வேறொருவர் இக்கேள்விக்கு பதிலளிக்க முடியாது, உங்களைத் தவிர.

Bombay, 10 February 1985;
That Benediction is Where You are.



உலகம் முழுவதும் மனிதன் கீழ்நிலை நோக்கி சீர்குலைந்துகொண்டே போகிறான். இன்ப நுகர்ச்சி - அது தனிப்பட்ட இன்பமோ, கூட்டாக அடைய நினைக்கும் இன்பமோ, அதுவே வாழ்க்கையின் பிராதான ஆர்வமாக ஆகிக்கொண்டிருக்கிறது.

காம இன்பம், தான் சொல்வதே சரி என்று தன்னை முக்கியப்படுத்தும் போதுள்ள இன்பம், களிப்பினால் இன்பம், தன்மீதே செலுத்தும் ஆர்வத்தினால் இன்பம், பதவி, அந்தஸ்த்தினால் இன்பம் என இன்னும் பலவகையில் இன்ப நுகர்ச்சி அவனுக்கு இருக்கின்றன. அனுபவித்தே தீரவேண்டும் எனும் உறுதியான தேவை அவனுக்கு இருக்கும் பட்சத்தில், கீழ்நிலையை நோக்கி சீர்குலைந்துபோவது தவிர்க்க முடியாதது.

அதேபோல, மனிதன், இன்ப நுகர்வின் அடிப்படையில், வெறுமனே உறவு களை அமைத்து கொள்ளும் போது சீரழிவை நோக்கியே போகிறான். அடுத்துள்ளவர் மீது, இந்த பூமி, கடல் முதலயவற்றின் மீதெல்லாம் அக்கறை இல்லாதபோது, பொறுப்பு எனும் வார்த்தை அதன் அர்த்தத்தையே இழக்கிறது. இந்த அழகான பூமியை, அவன் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளாதது வேறு வகையான சீரழிவாகும். உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள், தன்னை சிறந்தவராக காட்டிக்கொள்ளும் படிற்றொழுக்கம், வர்த்தகத்தில் நேர்மையற்றவராக இருப்பது, அன்றாட உரையாடல் களில் பொய் பேசுவது ஒரு அங்கமாதல், சிலரின் கைகளில் சட்டம் மீறிய கொடுங்கோன்மை. இது போன்ற விஷயங்கள், விஞ்சும்போது, வாழ்க்கை இருப்பு அனைத்திற்குமே நீங்கள் வஞ்சகம் செய்வதாக ஆகிறது. அப்போது, கொல்வதே வாழ்வின் மொழியாக ஆகிவிடுகிறது. காதல்/அன்பு என்பதை இன்ப நுகர்ச்சியாக எடுத்துக்கொள்ளும்போது, வாழ்வின் புனிதம் மற்றும் அழகிடமிருந்து மனிதன் தன்னை பிரித்துக் கொள்கிறான்...

எந்த அளவிற்கு இன்ப நுகர்ச்சி அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு ''நான்'' என்பதை வலுப்படுத்து கிறோம். இன்ப நுகர்வுக்காக மட்டும் மனித உறவுமுறை இருக்கும் போது மனிதன் ஒருவரையொருவர் உபயோகப்படுத்திக் கொள்வதாக ஆகிறது... இன்ப நுகர்ச்சி வாழ்க்கையின் பிராதான விஷயமாக கருதும்போது, இந்த நோக்கத்திற்காக மனித உறவுகளை உபயோகப் படுத்திக் கொள்ள நேரிடுகிறது. அதனால், யதார்த்த உறவுமுறை அங்கு இருப்பதில்லை. அப்போது, உறவுமுறை வர்த்தகம்போல் ஆகிறது. அடைந்தே தீரவேண்டும் எனும் வேட்கையானது, இன்ப நுகர்வை யையே அடித்தளமாக கொண்டு ள்ளது. அந்த இன்ப நுகர்வு மறுக்கப்படும்போதோ, இன்பத்தை வெளிப்படுத்திக்கொள்ள எந்த



Vasantha Ithaz Newsletter June 2020.indd 3 17-06-2020 4:02:46 PM

வழியும் கிடைக்காதபோதோ, அதனை தொடர்ந்து கசப்பு, கோபம், எரிந்து எரிந்து விழுவது, வெறுப்பு முதலியவை வருவது நிச்சயம்.

The Whole Movement of Life is Learning: Letters to the Schools, Ch. 28.

**ம**னிதன் ஏன் புலனின்பங்களில் சிக்கிக்கொண்டுள்ளான்?... இது எரிந்து கொண்டிருக்கும் ஒரு விவாதமாக ஆகிக்கொண்டிருக்கிறது. ஏனெனில், நவீன சமூகத்தில் சாத்தியப்படும் வழிகளில் எல்லாம் புலனின்பம் தூண்டப்படுகிறது - செய்திதாள்கள், சினிமா, பத்திரிக்கைகளில் பாலுணர்வை தூண்டுதல், விளம்பரங்களில் உங்கள் கவனத்தை ஈர்ப்பதற்காக பெண்ணின் படத்தை உபயோகித்தல்; உள்முக வெளிமுக தூண்டுதலை ஊக்குவிக்கப்படுகிறது. இதை வேண்டுமென்றே திறம்பட செய்கிறார்கள். தற்போதைய சமூகமானது அடிப்படையிலேயே புலனின்ப நுகர்வை நியாயப்படுத்தும் உங்கள் தத்துவத்தின் வெளித்தோற்றமாக இருக்கிறது. அதனால் தான் பொருட்கள், பதவி, பெயர் புகழ், பிரிவினை முதலியவை அதிமுக்கியத்துவம் பெறுகிறது. புலனின்ப அனுபவமே வாழ்க்கையில் பெறவேண்டிய அத்தியாவசியமாகி விட்டது... மென்மையுணர்வுயின்மை, வெறுமை, பணம் சம்பாதிப்பதற்காக இயந்திரத்தனமான அன்றாட செயல், சீட்டு ஆடுவது, சினிமாவுக்கு செல்வது, புத்தகங்களை படிப்பது ஆகியவையே உங்கள் வாழ்க்கையாக உள்ளது.

Bombay, 15 February 1948;
The Collected Works, Vol. IV.

**ப**ணக்காரன் தன்னை மறப்பதற்காக இரவு நேர விடுதியில் கேளிக்கையில், கார்களில், பயணங்களில் நேரத்தை செலவிடுகிறான். சாதுர்யமானவன் தன்னை மறக்கப் பார்க்கிறான், அதனால் அவன் அதற்கான வழியை கண்டுபிடிக்க தொடங்கி, மகத்தான நம்பிக்கை கொள்கைகளை உருவாக்குகிறான். முட்டாள் தன்னை மறப்பதற்கு பிற மனிதனை பின்பற்றுகிறான், அவர்களுக்கு குருமார்கள் இருக்கிறார்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லித் தர. தான் ஒரு பெரிய மனிதனாக ஆகவேண்டும் என்ற இலட்சியவாதி தன்னை மறப்பதற்காக எதை எதையோ செய்கிறான். ஆக, நாம் அனைவருமே வயது ஏற ஏற, வளரும்தோறும் நம்மை மறப்பதற்கே பார்க்கிறோம்.

Varanasi, 22 January 1954;
Leaving School, Entering Life.

**ஓ**யாது எதைப்பற்றியாவது எண்ணிக் கொண்டேயிருக்கும் மனதானது அது வெளிப்படுத்தும் உணர்வுகளையும் செயல்களையும் பல்வேறு விதமாக மாற்றிக்கொண்டே இருக்கும். அந்த மனது ஓயாமல் எதையாவது தன்னுள் நிரப்பிக்கொண்டே இருக்கும்- உணர்ச்சிகளை எப்போதுமே அதிகரிக்கச் செய்வது, வந்து வந்து போகும் ஆர்வங்கள்; வீண்பேச்சில் இவையெல்லாமே அடங்கியிருக்கும். பலரின் வேலையே மற்றவர்களின் சொந்த விஷயங்களின் மீது அக்கறை கொள்வதாக இருக்கிறது. இந்த அக்கறையே, அவர்கள் கணக்கற்ற பத்திரிக்கைகள், செய்திதாள்களை வாசிப்பதை காட்டுகிறது - செய்தி தாள்களில் பிறரைபற்றி பேசும் பகுதி, கொலை கொள்ளை செய்தி, விவாகரத்துக்கள் மற்றும் பலப்பல. அதனால், நாம் மேன்மேலும் வெளிமுகம் உடையவராக ஆகிறோம். உள்முகமாக வெறுமையுடையவராய் இருக்கிறோம். எந்த அளவிற்கு வெளியுலகை நோக்குபவராக இருக்கிறோமோ, அந்த அளவிற்கு மன எழுச்சியும் அதனால் நம்மை பார்ப்பதற்கான தடையை நாமே உருவாக்கவும் செய்கிறோம். நவீன உலகு, இவ்வாறான மேம்போக்கான செயல்பாடுகளையும் தடைகளையுமே ஊக்குவிக்கிறது. பெரும்பாலோர் எதிலும் ஈடுபடாமல் அமைதியாக இருப்பதற்கு அஞ்சுகிறார்கள்.

Commentaries on Living I, Ch. 3.

எதிர்காலத்தை குறித்து நாம் அக்கறை செலுத்துவதே இல்லைபோல தெரிகிறது.

தொலைக்காட்சியில் பார்த்தீர்கள் என்றால் காலை முதல் இரவு வரை முடிவில்லாத பொழுதுபோக்கு தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. சிறுவர்களை பொழுதுபோக்கில் இருக்கச் செய்கிறோம். ஊடக விளம்பரங்களனைத்தும் உங்களின் பொழுதுபோக்கும் உணர்வை தக்க வைத்துக்கொள்ள பார்க்கின்றனர். உலகம் முழுவதும் இது நடைமுறையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சிறுவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்? விளையாட்டு - பொழுதுபோக்கு ஒன்று உள்ளது - அதில் ஆட்டக் களத்தில் சிலர் விளையாடுவதை முப்பது அல்லது நாற்பது ஆயிரம் பேர் தொண்டை வறண்டுபோகும் அளவுக்கு கூச்சலிட்டு பார்ப்பார்கள்... வெவ்வேறு விதத்திலுள்ள கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகிய இவையெல்லாவற்றையும் உலகில் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் வெவ்வேறு வகையாக இருந்தாலும் அதன் தன்மை ஒன்றே. இவற்றையெல்லாம் பார்த்து, ''சிறுவர்களின் எதிர்காலம் என்ன ஆகப்போகிறதோ!'' என அக்கறையுள்ளவர் நிச்சயமாக கேள்வி எழுப்பியே தீர்வார்கள்.

இப்போது நிகழ்வதுபோல, பொழுது போக்கு நிறுவனங்களின் கையில் உலகு செல்லும்போது; இளைஞர்கள், சிறுவர்கள், மாணவர்கள் முதலியவர்கள் தொடர்ந்து இன்பக் களிப்புகளுக்கு, கண்கவருவதற்கு, புதுமை உணர்வு ஊட்டுகிற விஷயத்திற்கு தூண்டப்படும்போது, கட்டுப்பாடு எளிமை என்ற வார்த்தையெல்லாம் மறைந்து போகிறது. அதை பற்றி ஒரே ஒரு எண்ணம்கூட அவர்களுக்கு வருவதில்லை... எளிமை என்பதில் என்னவெல்லாம் அடங்கியுள்ளது என்பதை நீங்கள் காதுகொடுத்துகூட கேட்கமாட்டீர்கள். நீங்கள் குழந்தை

பருவத்திலிருந்தே, பொழுதுபோக்கு மூலமாக உங்களிடமிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள கேளிக்கைகளில் ஈடுபடுமாறு வளர்க்கப்படுகிறீர்கள். மேலும், பெரும்பாலான மனோ தத்துவ நிபுணர்கள் வேறு ‘‘உங்கள் உணர்வுகள் அனைத்தையும் வெளிப்படுத்திக்கொள்ளுங்கள், அவற்றை கட்டுப்படுத்திவைக்காதீர்கள், இல்லையென்றால் அது உங்களை பாதிக்கும், பல்வேறு விதமான மனக்கோளாருகளை உண்டாக்கும்’’ என்கிறார்கள். இந்த அனைத்து காரணங்களினால் நீங்கள் இயல்பாகவே மேலும் மேலும், கேளிக்கை, பொழுதுபோக்கு எனும் உலகினுள் நுழைகிறீர்கள். இவையனைத்தும் நீங்கள் எதுவாக இருக்கிறீர்களோ அதிலிருந்து தப்பிக்கச் செல்வதற்கே உதவுகிறது.

Krishnamurti to Himself, 18 March 1983.

எந்திர மனிதன் (robot) எனும் கண்டுபிடிப்பு வளர்ச்சி அடைந்துகொண்டு வருகிறது, அதனால், மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று மணி நேரம் மட்டுமே வேலை செய்வான் போலிருக்கிறது. இவ்வாறு நடக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. அப்போது மனிதன் என்ன செய்வான்? அதிக நேரம் மீதமிருப்பதனால் அவன் பொழுபோக்கு உலகில் மூழ்கிப்போகப் போகிறானா?.... அல்லது அவன் உள்முகமாக திரும்பி, அக ஆராய்ச்சியில் ஈடுபடப் போகிறானா? இந்த இரண்டு சாத்தியங்களே அவனுக்கு அப்போது இருக்கும். ஆனால், இரண்டாவது சொன்னது ஒரு பொழுதுபோக்கு அல்ல, மாறாக, அதற்கு, உள்ளதை உள்ளபடி கவனித்தல், விசாரணை, சொந்த விஷயத்தின் அடிப்படையில் பார்க்காத ஒரு பார்வை ஆகிய அசாதாரண திறன் தேவைப்படுகிறது.

Saanen, 21 July 1981;
The Network of Thought.

நீங்கள் உங்களின் சொந்த திறன்களிலேயே மூழ்கிவிடுகிறீர்கள், உங்களுக்கு இயல்பாக கிடைத்த சுயவிருப்ப தனித் திறமைகளிலேயே உங்களை இணைத்துக்கொள்கிறீர் அது மிகவும் ஆபத்தான நண்பர்கள் (ஆன்மீக வாழ்க்கைக்கு). ஒரு நேரத்தில் அவை தானாகவே உங்களை விட்டு போய்விடும் காலம் வரும். அப்போது, அது இல்லாத காரணத்தால் தாங்கொணா துன்பம் ஏற்படும்... உங்கள் உணவு, உடைகள், உங்கள் பாணி மற்றும் நீங்கள் அனுபவிக்கும் இன்பங்கள் இவைகள் எல்லாம் உங்களை களைப்பாக்கி உங்கள் உணர்வை மந்தமாக்கிவிடுகின்றன; உங்கள் மனதின் உணரும் திறனை சிறிது சிறிதாக இழக்க செய்கின்றன. அதனால், உங்களது புரிந்துகொள்ளும் ஆற்றல் சிறிது சிறிதாக போய் விடுகிறது.... மேல் மனதின் பல்வேறு செயல்களை உணரும் விழிப்புணர்வினால் மட்டுமே; அதன் இடைவிடா பேச்சு, அலைபாயும் செயல், அதன் வாதங்கள், முடிவுகள் முதலியவற்றை விழிப்புணர்வு கொள்வதன் மூலம் மட்டுமே அமைதியும் தெளிவும் வாய்க்கிறது.

The World Within, Chapter-75

*‘‘ஈடு இணையற்ற உன்னதம்,*
*சத்தியம் ஒன்றே.*
*மனிதகுலம் ஒன்றே.*
*நேர்மைநெறி ஒன்றே.*
*சத்தியத்தை உணர்ந்தறிய,*
*உன்னையன்றி,*
*பாதையேதுமில்லை,*
*உணர்த்துவாருமில்லை.*
*உன் மீட்சியை நீயே தேடு,*
*பிறகு உன்னால் உலகில் நிலவும்*
*குழப்பம், முரண்பாடு,*
*துக்கம், பகைமை*
*முதலியவற்றிலிருந்து*
*உலகை மீட்கலாம்.’’*

The World Within, Ch. 19.

ஆகவே, முக்கியமானது என்னவெனில், தன்னை அறியும் அறிவே. தன்னை புரிந்துகொள்வது இல்லையெனில், உலகத்தில் ஒழுங்கு, சீர்மை எப்படி வரும்? எண்ணவோட்டத்தின் செயல்பாடு, மனதின் உணர்வுகள், விகாரங்கள், மனதிலிருந்து வெளிப்படும் செயல்கள் ஆகிய அனைத்தை பற்றியும் விசாரணை செய்யாமல், ஒருவரால் உலகத்தில் அமைதி, ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியவற்றை கொண்டுவரமுடியாது. ஆகவே, தன்னைப்பற்றி கற்பதே முதன்மையானது, அதுவே முக்கியம். அது, தன்னிலிருந்து தப்பிக்கும் செயல் அல்ல, தன்னைப் பற்றி கற்பது செயலற்ற நிலையல்ல. மாறாக, அதற்கு, தான் செய்யும் ஒவ்வொரு செயலையும் உணர்ந்து கொள்ளும் அசாதாரண விழிப்புணர்வு தேவைப்படுகிறது. அந்த விழிப்புணர்வில் எடைபோடும் செயலோ, அதிருப்தியுறும் உணர்வோ, குறைகூறுவதோ இருக்கலாகாது.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள்எப்படிசெயல்படுகிறீர்என்பதை முழுவதுமாக பார்க்கும் விழிப்புணர்வானது உங்களை குறிப்பிட்ட திசையில் குறுகிவிடச் செய்யாது. மாறாக, அது உங்களை விரிவாக்கும். அந்த விழிப்புணர்வு ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு தெளிவை ஏற்படுத்தும்; இந்த விழிப்புணர்விலிருந்தே சீர்மை வருகிறது. முதலில் உங்களிடம் சீர்மையும், அதன் காரணமாக நீங்கள் கொள்ளும் உறவுகளிலும் சீர்மை உருவாகும்.

Poona, 19 September 1948;
The Collected Works, Vol. V.

வீட்டின் கதவையும் ஜன்னலையும் மூடிக்கொண்டு உள்ளே வசிக்கும் போது நீங்கள் மிகவும் பாதுகாப்பாக, ஜாக்கிரதையாக, நிம்மதியாக இருப்பதாய் உணர்கிறீர்.

ஆனால், வாழ்க்கை அப்படி அல்ல. வாழ்க்கை இடைவிடாது நம் கதவை தட்டிக்கொண்டே இருக்கிறது, அது நம் வீட்டு கதவை திறக்குமாறு எப்போதுமே அழுத்திக்கொண்டே இருக்கிறது. அப்போதுதான் நீங்கள் வாழ்க்கையை மேலும் அதிகமாக பார்ப்பீர். பயம் வந்துவிட்டாலோ, அனைத்து கதவுகளையும் மூடுகிறீர், இருந்தாலும் கதவு தட்டுவதும் அதிகரிக்கவேச் செய்கிறது.

எந்த அளவிற்கு வெளிமுக பாதுகாப்பை பிடித்துக் கொள்கிறோமோ –

அது கொள்கையாக இருந்தாலும் சரி - அந்த அளவிற்கு அது நம்மைப் பிடித்துக் கொள்ளும்.

எந்த அளவிற்கு அஞ்சுகிறீரோ, ஒன்றுடன் இணைத்துக் கொள்கிறீரோ அந்த அளவிற்கு துன்பம் கதவை தட்டவே செய்யும். நீங்கள் முந்தினால் அது உங்களை முந்தும். இதுவே வாழ்க்கை நமக்கு விடுக்கும் கேள்வி. வாழ்க்கை உங்களை விடாது.

Varanasi, 16 December 1952;
The Collected Works, Vol. VII.2

ஆக, எது நம்மை மாற்றமடையச் செய்யும்? பேரிடரா? தலைமீது விழும் அடியா? துயரமா? கண்ணீரா? இவையெல்லாம் நடந்துவிட்டது - பிரச்சினைக்கு பின் பிரச்சினை. முடிவே இல்லாமல் கண்ணீர் வடித்துவிட்டோம். எதுவும் உங்களை மாற்றமடையச் செய்யவில்லை. வேறு யாரோ இந்த வேலையை செய்வார் என அடுத்தவரை நம்பிக்கொண்டு இருக்கிறீர்... யாருமே ''நான் அதனை கண்டறியப்போகிறேன்'' என்று சொல்வதில்லை.

Madras, 29 December 1979;
The Seed of a Million Years.

முழுமை நற்குண உணர்வுக்கான, கடவுளுக்கான, சத்தியத்திற்கான தேடல் ஒன்று உண்டு. நாமாக உருவாக்கி விதைக்கின்ற நற்குணத்தை, பணிவை சொல்லவில்லை. மாறாக, மனதின் தந்திரங்களுக்கும், கற்பிதங்களுக்கும் அப்பால் இருக்கிற ஒன்றிற்கான தேடலை சொல்கிறேன். அதாவது, அறியப்படாத அந்த ஒன்றிற்கான உணர்வை பெறுங்கள், அதிலேயே வாழுங்கள், அதிலேயே இருங்கள் - அதுவே உண்மை சமய நெறி. ஆனால், அதை செய்யவேண்டுமெனில், உங்களுக்காக நீங்களே குழிவெட்டி அமைத்துக்கொண்ட சிறிய குட்டையிலிருந்து வெளியேறி, வாழ்க்கை எனும் நதிக்கு மாறிச்செல்ல வேண்டும். அப்போது வாழ்க்கை, அதிசயத்தக்க விதத்தில் உங்களை பார்த்துக்கொள்ளும், ஏனெனில் அங்கு, உங்கள் பக்கத்திலிருந்து பார்த்து கொள்வது என்பது இருக்காது. வாழ்க்கை உங்களை எங்கு எடுத்து செல்லவேண்டுமோ அங்கு உங்களை சுமந்து செல்லும், ஏனெனில் நீங்கள் அதனின் ஒரு பகுதி, அதுவே நீங்கள்; அப்போது பாதுகாப்பு பற்றி எல்லாம் பிரச்சினை இருக்காது - அடுத்தவர் என்ன சொல்வார்களோ அல்லது எதுவும் சொல்லவில்லையே எனும் பிரச்சினை எல்லாம் இருக்காது, அதுவே வாழ்வின் அழகு.

Think on These Things, Ch. 17.

சத்தியத்தை நாடுவதிலேயே உங்களுக்கான உணவுத்தேவையும் நிறைவேற்றப்படும்; மாறாக, உணவுத் தேவையை மட்டும் தேடிச் சென்றால், போட்டிமனப்பான்மையால் கிடைக்கும் உணவுகூட கிடைக்காமல் சிரமப்படும் நிலை வரும். மனிதனின் தலையாய நோக்கம் உணவு அல்ல; அதை தலையாயதாக கருதினால், பின் அழிவு, கொலை, பசிபட்டினி இவையே அதன் விளைவாக இருக்கும். கணந்தோறும் ஏற்படும் நிலையாமையை நாடுவதினூடே நிலையான நித்தியம் உள்ளது. சத்தியத்திற்கு பாதையேதும் இல்லை, ஏனெனில் அது இப்போது இங்கேயே உள்ளது, எப்போதும் உள்ளது.

The World Within, Ch. 76.

**Statement about ownership and other particulars of Vasantha Ethal**

**FORM IV**

| | |
|---|---|
| 1. Place of publication | : Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai – 600 028 |
| 2. Periodicity of publication | : Once in four months (February, June, and October) |
| 3. Printer's name | : N. Subramanian |
| Whether citizen of India | : Yes |
| Address | Sudarsan Graphics Pvt. Ltd., 4/641, 12th Link Street, 3rd Cross Road, Nehru Nagar, Kottivakkam (OMR), Chennai - 600 041 |
| 4. Publisher's name | : Dr. V. Aravind |
| Whether citizen of India | : Yes |
| Address | : Anugraha, Flat No. 2, Old No 26, New No 51, Fourth Trust Cross Street, Mandavelli, Chennai - 600 028 |
| 5. Editor's Name | : K. Krishnamurthy |
| Address | : Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | : Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 Greenways Road, Chennai - 600 028 |

I, Dr. V. Aravind, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

(V.Aravind)

*Published in February, June & October.*

Periodical

*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by Dr. V. Aravind on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028. Printed by N. Subramanian at Sudarsan Graphics Pvt. Ltd., 4/641, 12th Link Street, 3rd Cross Road, Nehru Nagar, Kottivakkam (OMR) Chennai - 41 Editor: K. Krishnamurthy*



Vasantha Ithaz Newsletter June 2020.indd 6 17-06-2020 4:02:46 PM